

ஆலந்தூரில் மறைந்த ஆலந்தூர் தெற்கு பகுதிப் பிரதிநிதி செந்தில் வேல் அவர்களின் இல்லத்திற்கு சென்று கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அண்மையில் திருமணம் நடைபெற்ற மணமக்கள் பி.பி.வில்வநாதன் – எஸ்.கேஷ்வ பிரியா ஆகியோரை வாழ்த்தினார். உடன் ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12–வது மண்டல குழு தலைவருமான என்.சந்திரன், 166–வது வட்ட கழக செயலாளர் இ.உலகநாதன், 167–வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன், வட்ட பொருளாளர் சுகுமாரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றிய பேரூர்.தி.மு.க.செயற்குழுக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் கலந்து கொண்டு கழக நிர்வாக மறு சீரமைப்பு குறித்து ஆலோசனை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன், பேரூர் செயலாளர் என்.எஸ். பாரி வள்ளல், பேரூராட்சி மன்ற தலைவர் பொன் சசிகுமார் மற்றும் ஒன்றிய பேரூர் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியில்

# இடி தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு நிதி உதவி!

## முன்னாள் அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்!





கடலூர் செப். 7--

திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி பெண்ணாடம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை திடீரென இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது.

அப்போது, பெண்ணாடம் அருகே உள்ள நரசிங்க மங்கலம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி பெரியசாமி மகன் அழகானந்தம் (45) என்பவர் தனது விவசாய நிலத்தைப் பார்ப்பதற்காகச் சென்றுள்ளார்.

அங்கு எதிர்பாராதவிதமாக பயங்கர சத்தத்துடன் இடி, மின்னல் தாக்கியதில் அழகானந்தம் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

இதேபோல், அப்பகுதியில் பெய்த மழைக்காக அங்குள்ள ஒரு மரத்தடியில் ஒதுங்கிய அதே பகுதியைச் சேர்ந்த பெரியசாமி மகன் சத்தியராஜ் (35), செல்லதுரை மகன் ராம்குமார் (26) மற்றும் தீவலூர் கிராமத்தைச் சேர்ந்த பழனிமுத்து ஆகிய மூவர் மீதும் இடி தாக்கியது.

இதனால் அவர்களுக்கு கை, கால்கள் செயல் இழந்துள்ளது.

விருத்தாசலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் நிலையில் சிகிச்சை பெறுபவர்களை கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர்- முன்னாள் அமைச்சர்- திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர் சிவெ.கணேசன் சந்தித்து பிரட் பால் பழம் ஹார்லிக்ஸ் உள்ளிட்ட உணவு பொருட்கள் கொடுத்து நிவாரணம் வழங்கி ஆறுதல் கூறினார்.

தொடர்ந்து மருத்துவர்கள் இடம் இவர்களுக்கு முறையான சிகிச்சை வழங்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் விவசாயிகளும் கூலித் தொழிலாளர்களும் ஆவர். இது சம்பந்தமாக அவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து தருவதாகவும் சட்டசபையில் பேசுவதாகவும் தெரிவித்தார். உடன் மங்களூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பட்டூர் வீர. அமிர்திலிங்கம் திட்டக்குடி நகரக் கழக செயலாளர் வி. பி.பி.பரமகுரு நல்லூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் செம்பியன் தியாகராஜன் பெண்ணாடம் பேரூர் கழக செயலாளர் குமரவேல் அ. கோதண்டபாணி தொளார் இராஜேந்திரன் ஜெயராமன் பட்டி சு. வசந்த் விருத்தாசலம் நகர கழக செயலாளர் தண்டபாணி நகர மன்ற தலைவர் மருத்துவர். சங்கவி முருகதாஸ் வழக்கறிஞர் க. ரவிச்சந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகள் இருந்தனர்.

